**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF SUB JUDGE, NANGUNERI.

OS. 65 of 2025

Civil Case No :: Pw- 1

Name :: வெங்கடேஷ் பெருமாள்

Father's/Husband's Name :: சீனிவாசகம்

Village :

Taluk ::

Calling ::

Age ::

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 07.10.2025.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

04.11.2013 ம் தேதியிட்ட எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட பதிவு கிரைய ஒப்பந்தத்தின் அசல் ஆவணம் வா.சா-ஆ.1 ஆகும். 23.09.2014 ம் தேதியிட்ட நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் பதிவு தபால் ரசீது அசல் வா.சா-ஆ.2 ஆகும். பிரதிவாதியால் Refused செய்யப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா-ஆ.3 ஆகும். வாதி மீது பிரதிவாதி 13.04.2017 ம் தேதியில் திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் மனு மற்றும் ஆவணத்தில் உள்ள சாட்சிகளின் வாக்குமூலங்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்டது வா.சா-ஆ 4 ஆகும். ( தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆவணம் என்றும் தகுந்த சாட்சிகள் மூலம் நிரூபிக்க வேண்டியது

என்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). தபசில் சொத்திற்குரிய வில்லங்க சான்றிதழ்கள் 01.01.1985 முதல் 03.06.2014 வரை வா.சா.ஆ-5 ஆகும். தபசில் சொத்திற்குரிய வில்லங்க சான்றிதழ்கள் 01.01.1987 முதல் 31.10.2013 வரை வா.சா-ஆ.6 ஆகும். பிரதிவாதி எதிர்வழக்குரையில் கூறியுள்ள வள்ளியூர் சார்பு நீதிமன்ற OS No.64/2014 ல் ஏற்பட்ட தீர்ப்பாணையின் பேரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் ஆவண எண்.643/2016 வா.சா-ஆ.7 ஆகும். (சாட்சி மேற்கண்ட வழக்கில் தரப்பினர் அல்ல என்ற பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது).

பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.